# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 28.08.2020ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு தனிஅலுவலர் அவகளின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. | | | |
| 28.08.2020 | 328 | பொருள் எண். 01<br>அரியலூர் நகராட்சியின் மூலம் மாவட்ட விளையட்டு அரங்கில் 15.08.2020 அன்று கொண்டாடப்படவுள்ள சுதந்திர தினவிழா கொண்டடாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளான மரக்கன்று நடுதல், பூந்தொட்டி வைத்தல், சிவப்பு கம்பளம் விரிப்பு, மைக்செட், தளவாட சாமான்கள், சாமியானா, குடிநீர் விநியோகம், கழிவறை வசதி, வரவேற்பு பேனர், விழாப்பேனர் வைத்தல் மற்றும் சமாதானப்புறா பறக்க விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அரசு நிகழ்ச்சி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 28.08.2020 | 329 | பொருள் எண். 02<br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பகிர்மான குழாய்கள், திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் வரை உள்ள பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய வருடாந்திர செலவினமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 28.08.2020 | 330 | பொருள் எண். 03<br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10,12க்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து சாக்கடை நீர் வழிந்து சாலையின் குறுக்கே செல்வதால், சுமார் 15 மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டவும், மேலும் அப்பகுதியில் உள்ள பொது கிணறு முடி அமைப்பதற்கும், அப்பகுதியில் பொது கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி இல்லாததால் பொது மக்கள் கழிப்பிடத்தை உபயோகிக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அருகிள் உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து தண்ணீர் வசதி செய்து தரவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>28.08.2020</td>
<td>331</td>
<td>
<u>பொருள் எண். 04</u><br>
அரியலூர் நகராட்சியின் மூலம் மாவட்ட விளையட்டு அரங்கில் 15.08.2020 அன்று கொண்டாடப்படவுள்ள சுதந்திர தினவிழா கொண்டடாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளான மரக்கன்று நடுதல், பூந்தொட்டி வைத்தல், சிவப்பு கம்பளம் விரிப்பு, மைக்செட், தளவாட சாமான்கள், சாமியானா, குடிநீர் விநியோகம், கழிவறை வசதி, வரவேற்பு பேனர், விழாப்பேனர் வைத்தல் மற்றும் சமாதானப்புறா பறக்க விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 11.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தாரர்கள் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.வெ.ஹரிகிருஷ்ணன், அரியலூர்</td><td>1.87% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பிரேம்குமார், வெங்கடரமணபுரம்</td><td>1.27% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.87% குறைவாக கொடுத்த திரு.வெ.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. அரசு நிகழ்ச்சி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.08.2020</td>
<td>332</td>
<td>
<u>பொருள் எண். 05</u><br>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பகிர்மான குழாய்கள், திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் வரை உள்ள பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை ஓராண்டிற்கு சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள 14.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தாரர்கள் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.A.சுதாகர், வி.கைகாட்டி</td><td>0.52% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.R.P.அழகப்பன், பெரம்பலூர்</td><td>0.78% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.52% குறைவாக கொடுத்த திரு.A.சுதாகர், வி.கைகாட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>28.08.2020</td>
<td>333</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுதலை கட்டுப்படுத்தும் பொருட்டும், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முதிர்கொசுக்களை அழிக்கும் பணிக்கு (Adult Control) பயன்படுத்தப்படும் புகைமருந்து அடிப்பான்களை பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.316, நாள்.25.06.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி 16.08‘.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>Sri Sudarshana Traders, Perambalur</th><th>Sri Priya Electricals, Perambalur</th><th>Sri Krishna Electricals, Perambalur</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான புகைமருந்து அடிப்பான்கள் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>புகைமருந்து அடிப்பான் சிறயது . ரூ.6750/- பெரியது ரூ.22100/-</td><td>புகைமருந்து அடிப்பான் சிறயது . ரூ.6900/- பெரியது ரூ.22500/-</td><td>புகைமருந்து அடிப்பான் சிறயது . ரூ.6700/- பெரியது ரூ.22000/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u>
<ol>
<li>குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Sri Krishna Electricals, Perambalur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.</li>
<li>பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>